ஆதிவாசி
முன்னேற்ற சங்கம்,
கூடலூர்

# பாரம்பரியமாக ஆதிவாசிகளின் உபயோகத்திலிருந்த தாவர வகைகளை புத்துயிர்ப்படுத்தும் திட்டம்

**Ashoka Trust for Research in Ecology and Environment**, Bangalore

முதுமலை வனப்பகுதியில் உள்ள பல்லுயிர் பாதுகாப்புப் பணிகளில் இப்பகுதியின் ஆதிவாசி முன்னேற்ற சங்கத்தைச் சேர்ந்த ஆதிவாசிகளும், அக்கார்டு நிறுவனமும் பல வேலைகளைச் செய்து வருகின்றன. பழங்காலத்தில் ஆதிவாசி சமுதாயத்திற்கு உபயோகமாய் இருந்த பல மரங்களும், செடிகளும் இப்போது அழிந்து விட்டதால் அவற்றை மீண்டும் கொண்டுவரும் முயற்சியாக பல முக்கிய தாவர இனங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றை வளர்க்க ஒரு நாற்றங்கால் (நர்சரி) தொடங்கப்பட்டுள்ளது. பெங்களூருவில் உள்ள **ATREE** என்ற நிறுவனத்தின் "CEPF-மேற்குத் தொடர்ச்சி மலைகள்" என்ற திட்டத்தின் நிதியுதவியுடன் தேவாலா மதுவனா எஸ்டேட்டில் தொடங்கப் பட்டுள்ள இந்த நர்சரியில் 4000 க்கும் மேற்பட்ட செடிகள் வளர்க்கப்பட்டுள்ளன.





முதுமலை புலிகள் காப்பகத்தின் அருகிலுள்ள ஆதிவாசி கிராமங்களில் இப்படிப்பட்ட பாரம்பரிய மரம் மற்றும் செடிகளை வளர்ப்பதால் ஆதிவாசிகள் தம்முடைய தேவைகளுக்காக முதுமலை காட்டின் மையப்பகுதிக்குப் போவதை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக்கொள்ள முடியும். நமக்குத் தேவையான உபயோகமான செடி மற்றும் மரங்களை நாமே நம் கிராமங்களில் வளர்க்க முடிந்தால், புலிகள் வசிக்கும் அடர்ந்த காட்டுப்பகுதிக்கு நாம் செல்ல வேண்டிய அவசியம் படிப்படியாகக் குறையும் என்ற நோக்கத்தில் தான் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகிறது. முதுமலை வனப்பகுதிகளில் பல்லுயிர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தான் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம்.

இந்தச் செடிகள் தேவைப்படும் ஆதிவாசி குடும்பங்களுக்கு வழங்கப்படும். இவற்றை வேண்டுபவர்கள் அருகிலுள்ள ஆதிவாசி முன்னேற்ற சங்கத்தின் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம். மேலும் இந்த நர்சரியில் வேறு முக்கிய செடிகள் வளர்க்கப்படலாம் என்ற ஆலோசனை கூற விரும்புபவர்களும் அக்கார்டு நிறுவனத்தையோ அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்களையோ தொடர்பு கொள்ளலாம். மேலும் இந்தச் செடிகள் வளர்க்கப்படுவதிலோ அல்லது பின்னர் நடப்படுவதிலோ அல்லது இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதிலோ யாருக்காவது புதிய ஆலோசனை அல்லது கருத்துவேறுபாடு இருந்தால் அவர்கள் உடனடியாக கீழ்கண்ட நபர்களை தொடர்பு கொண்டு தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம்.

| தகவல் தொடர்பு மையம் | குறை தீர்க்கும் வழிமுறை |
|---|---|
| 1. திரு. K.T.சுப்ரமணியன், மேலாளர், மதுவனா எஸ்டேட், தேவாலா (9442284893)<br>2. டாக்டர் மகேஷ், ஆயுர்வேதா மருத்துவர், அக்கார்டு, கூடலூர். (9487026368)<br>3. திரு. பொம்மன், செயலாளர், ஆதிவாசி முன்னேற்ற சங்கம் (9443614995) | 1. Mr. Bhaskar Acharya, Project Coordinator (CEPF Project), ATREE, Srirampura, Jakkur Post, Bangalore. (09008322664)<br>2. Jack Tordoff, CEPF Grant Director, Western Ghats, ATREE,Srirampura, Jakkur Post, Bangalore.<br>3. கோட்ட வன அலுவலர், கூடலூர். (260321, 261340) |